வளன்ஆயம்
தொழிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தொல்காப்பிய உரைவழி அறியலாகும் பிரிவு மரபுகள்

**முனைவர் இரா. முரளி கிருட்டினன்**
**உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை,**
**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி – 02**
**மின்னஞ்சல் முகவரி – muralikrishnan_ta2@mail.sjctni.edu**

அறிமுகம்:

உலகில் பல்வேறு மொழிகள் தோன்றியுள்ளன. சில மொழிகள் மறைந்தும் உள்ளன. ஆனால் அவற்றுள்ளும் தன்னேரில்லாத மொழியாக இன்றும் நிலைபெற்று விளங்குவது நம் தமிழ்மொழியாகும். இலக்கிய வளமும் இலக்கணச் சிறப்பும் உடைய நம் மொழியில் காலந்தோறும் பல நூல்கள் தோன்றிக்கொண்டே இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் ஆணிவேராக அமைந்திருப்பது தொல்காப்பியமே. தொல்காப்பியத்தின் இலக்கண வரம்புகளை அடியொற்றியே இலக்கண, இலக்கியங்கள் அமைந்திருக்கின்றன. ஒரு மொழியில் இலக்கிய நூல்கள் பல தோன்றி வாழ்ந்த பிறகே இலக்கண நூல்கள் தோன்றியிருக்க முடியும். அந்தவகையில் தமிழிலும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் தோன்றுவதற்கு முன்னமே பல இலக்கண நூல்கள் வழக்கத்தில் இருந்துள்ளன. காலத்தால் முந்தியதாக அகத்தியத்தைக் குறிப்பிட்டாலும் நமக்குக் கிடைக்கின்ற பழமையான இலக்கண நூலாகத் தொல்காப்பியமே உள்ளது. இதைத் தொல்காப்பியத்தில்; என்ப, என்மனார்புலவர், நுவன்றிசினோரே, நூலறி புலவர் எனப் ஏறத்தாழ முந்நூற்றெட்டு இடங்களில் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளதால் அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டு அமைந்துள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களையும், சொல்லதிகாரம் 463 நூற்பாக்களையும், பொருளதிகாரம் 656 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. ஆக மொத்தம் 1602 நூற்பாக்களைக் கொண்டுள்ள தொல்காப்பியம் பல்வேறு மரபுகளைப் பற்றிப் பேசுகிறது. அத்தகைய மரபுகளுள்

பிரிவு பற்றிய மரபு தொல்காப்பியத்தில் எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளன என்பதையும், உரையாசிரியர்கள் அவற்றிற்கு எவ்வாறு விளக்கமளித்துள்ளனர் என்பதைக் குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மரபு என்பதன் விளக்கம்:

மரபு என்பது பழந்தமிழ் மக்களால் சமூகத்தில் காலந்தோறும் பின்பற்றி வந்த நடைமுறையாகும். இலக்கண இலக்கியங்களைப் படைத்தச் சான்றோர்களும், புலவர்களும் தம்காலத்தில் இருந்த மக்களின் வாழ்க்கைமுறைகளையும், பழக்கவழக்கங்களையும்; தம் படைப்புகளின் வாயிலாகப் பதிவாக்கியுள்ளனர். தொல்காப்பியம் மரபுக்குப் பெரிதும் மதிப்புக் கொடுத்து அமைக்கப்பெற்றுள்ளது. நூன்மரபு, மொழிமரபு, தொகைமரபு, விளிமரபு, மரபியல் எனத் தொல்காப்பியர் மரபின் முக்கியத்துவம் கருதி இயல்களுக்குப் பெயர் சூட்டியதிலிருந்து இவற்றை நாம் அறிந்து கொள்ளலாம். இத்தகைய மரபுகளுள் பிரிவு பற்றிய மரபும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அறியமுடிகிறது.

பிரிவு மரபுகள்:

தொல்காப்பியத்தில் பிரிவு குறித்தச் செய்திகள் பொருளதிகார அகத்திணையிலும், கற்பியலிலும் இடம் பெறுகின்றது. அகத்திணையை ஏழு வகையாகத் தொல்காப்பியர் வரையறைசெய்துள்ளார். இதை,

“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப” ( அகத். 1)

என்ற நூற்பா விளக்குகிறது. அதாவது கைக்கிளை என்று சொல்லப்படுகின்ற சிறு உறவு முதலாகப் பெருந்திணை இறுதியாக ஏழு திணைகள் முன்னதாகப் பகுக்கப்பட்ட அகத்திணைகளாகும். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளுக்கும் முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என மூன்று பொருள்களை அமைத்துள்ளார். நிலமும் பொழுதும் முதற்பொருள் என்றும், இவற்றின் உரிப்பொருள்கள் பற்றிக் கூறும்பொழுது,

‘புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றுஇவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.’ (அகத். 16)

என்று பாகுபடுத்தி,உரிப்பொருள் ஐந்தனுள் குறிஞ்சிக்குரிய உரிப்பொருளாகிய புணர்தல் என்பது களவுக்கும், முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணைகள் கற்புக்கும், பாலை என்ற திணைக்குரிய உரிப்பொருளாகிய பிரிதல் என்பது களவு, கற்பு ஆகிய இரண்டு கைகோளுக்கும் பொதுவாகையால் பாலைக்குரிய பிரிதல் பற்றித் தொல்காப்பியர் அகத்திணையியலில் விரிவாகப் பேசுகிறார். இத்திணையின் சிறப்பைச் சங்கப் பாடல்களில் மிகுதியான எண்ணிக்கையிலான பாலைப் பாடல் காணப்படுவதிலிருந்தே அறியலாம். அகநானூற்றில் நானூறு பாடல்களில் இருநூறு பாடல்கள் பாலைப்பாடல்களேயாகும். நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது போல தம் இணையைப் பிரிந்து வாழும் போதே காதலின்பத்தின் அருமை உணரப் பெறும் என்பதானாலேயே பிரிதல் என்னும் உரிப்பொருள் பெரும் சிறப்பினைப் பெற்றுள்ளது.

பிரிவின் வகைகள்

தொல்காப்பியர் பாலைத் திணைக்குரிய பிரிவினைப் பல வகையாகப் பாகுபாடு செய்துள்ளார். பிரிவினை முதலில் இரு பெரும்பிரிவில் விளக்குகிறார்

‘இருவகைப் பிரிவும், நிலைபெறத் தோன்றலும்
உரியதாகும் என்மனார் புலவர்’ (அகத். 13)

இந்நூற்பாவில் பிரிவு இருவகைப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு இளம்பூரணர்,‘இருவகைப் பிரிவாவன தலைமகளைப் பிரிதலும், தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும்’ என்று விளக்கம் கூறியுள்ளார். ஆனால் முனைவர் தமிழண்ணலோ ‘இருவகைப் பிரிவு என்பது காலிற் பிரிவு (தரைவழி), கலத்திற்பிரிவு (கடல்வழி) என்று வகைப்படுத்தியுள்ளார்.

பிரிவு என்பது தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்வதையே குறிக்கும். அவ்வாறு பிரிந்து செல்வதற்குப் பல காரணங்கள் உள. அக்காரணங்கள் அடிப்படையிலேயே பிரிவுக்குப் பெயர் சூட்டப்படுகின்றது. பிரிவு ஓதல் பிரிவு, தூதிற்பிரிவு, பகைவயிற் பிரிவு, தேவர்ப்பிரிவு, காவற்பிரிவு, பொருள்வயின் பிரிவு, என்று ஆறுவகைப்படும் என்பார் இளம்பூரணர்.

“ஓதல் பகையே தூதிவை பிரிவே” (அகத். 27)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் முக்கிய பிரிவுகளாக இவற்றைக் குறிப்பிடுகிறார். இதற்கு இளம்பூரணர், ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்;ட இத்தன்மை பிரிவிற்கு நிமித்தமாம் என்று விளக்கம் அளித்துள்ளார்.

ஓதல் பிரிவு

ஓதற்குப் பிரிதலாவது தமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே அவற்றைக் கற்றல் வேண்டிப் பிரிதல் ஆகும்.

தூதிற் பிரிவு

தூதிற் பிரிதல் என்பது, இரு பெரும் வேந்தரிடையே சந்து (சமாதானம்) செய்தல் பொருட்டு தலைவியைப் பிரிந்து செல்லும் பிரிவாகும்.

'ஓதலும் தூதும் உயந்தோர் மேன' (அகத். 28)

என்ற நூற்பாவில் கற்பதற்கும், தூதிற்கும் பிரிவதென்பது உயர்ந்தோருக்கு உரியது என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதற்கு உரை எழுதிய இளம்பூரணர், ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவும் தூதாகிப் பிரியும் பிரிவும் நால்வகை வருணத்தினும் உயர்ந்த அந்தணருக்கும் அரசர்க்கும் உரியது என்று விளக்கம் கூறி பின்வரும் சான்றினையும் எடுத்துக்காட்டுகிறார்.

'வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே'(புறம். 205)

ஆனால் நச்சினார்க்கினியரோ, இவர்களோடு வணிகரையும் சேர்த்து மூவருக்கும் உரியது என்பார். முனைவர் தமிழண்ணலோ 'கற்பதற்கும் தூதுரைத்தற்கும் பிரிவதென்பது, சமுதாய நிலையில் உயர்ந்தவர்களுக்கு உரியனவாகும். கல்வி, கேள்வி, பண்பு, திறமைகளில் சிறந்தோர்க்கு என்பது இதன் பொருள் என்று குறிப்பிடுகிறார். வருணப்பாகுபாடு தொல்காப்பியர் கருத்தன்று. எக்குடிப் பிறந்தாராயினும் அறிவுத் திறத்திலும், வினைத்திறத்திலும், வாழ்க்கை நெறியில் சிறந்திருப்போர் உயர்வோரெனவே கொள்ளப்படுவார். 'மேற்பா லொருவன் கற்பின் கீழ்ப்பா லொறுவனும் அவன்கட் படுமே'(புறநானூறு ) எனும் தொடர் இதனை

வலியுறுத்தும். இதுவே தொல்காப்பியர் காலக் கருத்துமாம். தூதின் காரணமாகப் பிரியும் பிரிவு வேந்தனுக்கு மட்டு மல்லாது வேந்தனை ஒழித்த பிற குறுநில மன்னர்க்கும், சிறுகுடித் தலைமக்கட்கும், நானில தலைமக்கட்கும் உரியது என்பதை,

'வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே' (அகத். 34.)

என்ற நூற்பா மூலம் அறியலாம்.

பகைவயிற் பிரிவு

அரசன் மாற்று வேந்தரோடு போர் செய்யும் போது, போரின் பொருட்டுத் தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்வது பகைவயிற் பிரிவு ஆகும். இது இருவகையாகும். ஒன்று அரசன் தானே தலைமகனாகச் செல்லுதலாகிய பகை தணிவினைப் பிரிவு. இரண்டு அரசனோடு பொருந்தி ஏனைய அரசன் தலைவராயுள்ள போது செல்லுதலாகிய வேந்தற்குற்றுழிப் பிரிவு ஆகும். இதனை,

'தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே' (அகத். 29)

என்ற நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதிய உரை விளக்கம் தருகிறது.

தேவர் பிரிவு

கடவுளர்க்குரிய பூசை, வ்ிழா முதலியன தடைபெறாமல் நிகழ்தற்குத் காரணமாகிய அறம் நிறைவேற்ற ஏற்படும் பிரிவு தேவர் பிரிவு ஆகும்.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே" (அகத்.30)

என்ற நூற்பாவிற்கு இளம்பூரணர்,நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்புடைய மக்களையல்லாத தேவரது பூசையும் விழவும் முதலாயினவும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்களும்,முறைமையில் தப்பிய வழி தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும், பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரிவு நேரும் என்று விளக்கம் தருகிறார். இதற்குச் சான்றாகச் சேரன் செங்குட்டுவன் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவினைச் சான்றாகக்

கூறுகிறார். இவ்வாறு தேவர்ப்பூசை, விழாவின் பொருட்டுப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரியது என்பார் தொல்காப்பியர் இதனை,

‘மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே’ (அகத். 31)

என்ற நூற்பாவால் அறியலாம். மேன்மக்கள் என்று கூறும் மரபு, நான்கு நிலத்தவர்களிலும் உண்டு. அதாவது உயர்ந்தோர், மேலோர், மன்னர் பாங்கின் பின்னோர் எனப்படுதல் ஒரு நிலத்தவர்க்கு மட்டும் உரியதன்று. அதாவது எந்த நிலத்திலும் வினை செய்வோரும் உண்டு, படித்தோரும் உண்டு, வழிகாட்ட வல்ல சான்றோரும் உண்டு என்பது தமிழண்ணல் கருத்தாகும். ஆனால் நச்சினார்க்கினியரோ இப்பிரிவு அந்தணர்க்கும், அரசர்க்கும் இருவகை வேளாளர்க்கும் (உழுவித்து உண்போர், உழுதுண்போர்) உரியது என்பார்.

காவற் பிரிவு

நால்வகை நிலத்தின் மக்கள் தத்தம் முறையினின்று தப்பாது அறத்தை நிலை நாட்டுதல் ( நாட்டைக் காத்தல்) பொருட்டுப் பிரியும் பிரிவு காவற் பிரிவு எனப்படும். இப்பிரிவு குறித்துப் பேசும் தொல்காப்பியம்,

‘மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப’ (அகத்.32)

என்று கூறுகிறது. அதாவது வணிகரும், வேளாளரும் இப்பிரிவுக்குரியர் என்கிறது தொல்காப்பியம்.

கல்விப் பிரிவு

கல்விப் பிரிவு  முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு நில மக்களுள் ஒழுக்கத்தாலும், பண்பாலும் உயர்ந்தோர் எனக் கருதப்படுவார்க்கு உரியது என்பதை

‘உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான’

என்ற நூற்பா வழி தொல்காப்பியம் விளக்குகிறது. கல்வியிற் பிரிவு பின்னோராகிய இருவகையோரிலும் உயர்ந்தோராகிய வணிகர்க்கு உரியது என்பது இளம்பூரணரின் கருத்தாகும். இப்பிரிவு நால் வருணத்தார்க்கும் உரியது என்பது நச்சினார்க்கினியரின் கருத்தாகும். கல்வியும் கல்வித் தொடர்புடையனவும் அறிவு, தோற்றம், கூர்மை, திறமைகளில் உயர்ந்தவர்களுக்கு உரியனவாகும் என்று தமிழண்ணல் குறிப்பிடுகிறார்.

பொருட் பிரிவு

பொருள் தேடுதல் பொருட்டுப் பிரியும் பிரிவு பொருள் வயிற் பிரிவு எனப்படும். இவ்வாறு பொருள் தேடிப் பிரிவோரைக்குறித்துத் தொல்காப்பியர்,

'பொருள் வயிற் பிரிதலும் அவர் வயின் உரித்தே' (அகத்.35)

என்ற நூற்பா வழி விளக்குகிறார். இந்நூற்பாவிற்கு பொருள் எழுதிய இளம்பூரணர்,"பொருள்வயிற் பிரிவும் மேற் சொல்லப்பட்ட வணிகர் வேளாளரிடத்தில் உரியதாகும்" என்று எழுதுகிறார். மேலும் "உயர்ந்தோராகிய அந்தணர்க்குப் பொருள் வயிற் பிரிதல் உண்டோ? எனின், வணிகர்க்கும், வேளாளர்க்கும் வாணிகம் முதலிய பொருள் நிமித்தம் ஆகியவாறு போல, அந்தணர்க்கு இவை பொருணிமித்தம் ஆகா என்பதும் அவர்க்கு இயற்கையொழுக்கமாகிய ஆசாரமும், செயற்கை ஒழுக்கமாகிய கல்வியுமே பொருட்காரணமாம் என்பதும் கண்டவாறு" என்று இளம்பூரணர் உரையெழுதுகிறார். இவ்வாறு தலைவன் பொருள் தேடுவதற்காகக் கடல் கடந்து செல்லும் போது தலைவியை உடன் அழைத்துச் செல்வதில்லை என்பதை,

'முந்நீர் வழக்கம் மகடுஉவோ டில்லை' (அகத். 37)

என்ற நூற்பா விளக்குகிறது. முந்நீர் என்பதற்கு ஓதல், தூது, பொருள் ஆகிய மூன்று நிலைமையிற் செல்லும் செலவு தலைவியோடு அமையாது என்பது நச்சினார்க்கினியரின் கருத்து.

பிரிவில் நிகழும் கூற்றுகள்

அகத்திணையியலில் பிரிதல் என்னும் உரிப்பொருளைக் கொண்டு விளங்கும் பாலைத் திணையில் கூற்று நிகழ்த்துவதற்குரிய கதை மாந்தர்கள் யாவர் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அகத்திணைப் பாடல்கள் யாவும் கதை மாந்தரின் கூற்று நிலையில் அமைந்த பாடல்களாகவே விளங்குகின்றன. தலைவி கூற்று, செவிலி கூற்று, தோழி கூற்று, நற்றாய் கூற்று, தலைவன் கூற்று, பாங்கன் கூற்று, பாணர் கூற்று, கண்டோர் கூற்று, என்று கதை மாந்தர்களின் கூற்றாகவே பாடல்கள் அமைந்துள்ளன. இதனால் செய்யுள் உறுப்புகள் 34 என்று கூறிய தொல்காப்பியர் அவற்றுள் கூற்றுவகை என்பதையும் ஓர் உறுப்பாகவே கூறியுள்ளார். கூற்று, களவின் கண் நிகழும் கூற்று. கற்பின் கண் நிகழும் கூற்று என்று இரண்டு வகையாகக் கொள்ளலாம்.

உடன் போக்கும் நற்றாய் கூற்றும்

தலைவனும், தலைவியும் பகற் குறியிலும், இரவுக்குறியிலும் சில காலம் கூடி மகிழ்ந்து வருதலால் களவொழுக்கம் வெளிப்பட்டு அலராகின்றது. இதனை அறிந்த தலைவன் தோழியின் துணையோடு தலைவியை ஒருவருக்கும் தெரியாமல் தன்னுடன் அழைத்தக்

கொண்டு சென்று விடுவான். அங்ஙனம் செல்வதற்கு உடன் போக்கு என்று பெயர். உடன் போக்குக் காலத்தில் நற்றாய் கூற்று அமையும் என்பதைப் பின்வரும் நூற்பா விளக்குகிறது.

‘தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய’

1.தன்னையும், தலைமகனையும் தலைகளையும் குறித்துப் பல்லி முதலிய நிமித்தங்களைப் போற்றிக் கூறுதல்.

2.பிறர் தமக்குள் பேசும் மொழியை நற்சொற்களை நிமித்தமாகக் கொண்டு பேசுதல்.

3.உலகில் வாழும் இயக்கர் (கோடாங்கி, குறத்தி) முதலியோர் தெய்வம் ஏறப்பட்டு ஆவேசித்துக் கூறும் சொற்களை நல் நிமித்தமாகப் பேசுதல்.

4.தனக்கும், தலைமகன், தலைமகள் ஆகியோர்க்கும் உண்டாகும் நன்மை, தீமை, அச்சம், சார்தல் ஆகியவை பற்றிப் பேசுதல்.

5.முன்பு இப்படி இருந்தவள், இப்போது இப்படி இருக்கிறாள், இனி இவ்வாறு இருப்பாள் என்று முக்காலத்தும் தலைவியின் நிலை புலப்படுமாறு தோழியிடத்தும், கண்டோரிடத்தும் நற்றாய் புலம்புவாள்.

இதுவென் பாவை பாவை யிதுவென
இதுஎன் பூவைக்கு இனியசொல் பூவை என்று
அலமரு நோக்கின் நலம் வரு சுடர்நுதல்
காண்தொறும் காண்தொறும் கலங்க
நீங்கின ளோஎன் பூங்க ணோளே? (ஐங்குநூறு 375)

தலைவி உடன் போக்கு நிகழ்வை நினைத்து வருந்திய நற்றாய் தலைவியின் பாவை, கிளி, பூவை ஆகியவற்றைக் கண்டு புலம்பியதை இப்பாடல் விளக்குகிறது.

உடன்போக்கில் செவிலி கூற்று

உடன் போக்கு மேற்கொண்ட தலைவியின் பிரிவால் வருந்திய செவிலி தன் மகளைத் தேடி தானே செல்வதுண்டு என்பார் தொல்காப்பியர், இதனைப் பின்வரும் நூற்பாவில் காணலாம்.

'ஏமாப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே'(அகத்.40)

செவிலி தலைவி உடன் போன போது பெரிய காவலுடைய ஊரினகத்தும்,கோயிலும், சுரத்தின் கண்ணும் கண்டோரையும் வினாவிக் கொண்டே தாமாகச் செல்லுதல் உண்டு. இங்குத் தலைவியைத் தேடிச் செல்லுதல் என்பது பொருளாம்.

செவிலி சுரத்திடை வினாவியதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்.

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்,
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்,
நெறிப்படச் சுவல்அசைஇ, வேறுஓரா நெஞ்சத்துக்
குறிப்புஏவல் செலல்மாலை ஒழுக்கத்தீர் இவ்இடை,
என்மகள் ஒருத்தியும், பிறள்மகன் ஒருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும" (கலித். 8)

தோழி கூற்று

அகத்திணையில் தலைவி, தலைவன் இருவருடைய களவு, கற்பு நிகழ்வுகளில் தோழியின் பங்கு மிகமிகப் பெரியது. தோழி இன்றி தலைவன்-தலைவியின் களவு வாழ்க்கை வெற்றிபெற இயலாது. தலைவியும் மிகவும் நெருங்கியவளான தோழியின் கூற்று பற்றித் தொல்காப்பியர் பல நூற்பாக்களில் கூறுகிறார். பிரிவின் போது தோழி கூற்று நிகழும் இடம் குறித்துப் பின்வரும் நூற்பா விளக்குகிறது

"தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
சீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்மையுங் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழுந் தோளை

அழிந்தது களையென மொழிந்து கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றுந் தோழி மேன"

தோழிக்குக் கூற்று நிகழும் இடங்கள் எனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.தலைக்கு பின்னால் வரும் நோய் நிலையைத் தலைவனுக்கு எடுத்துரைக்கும் போது

2.உடன்கொண்டு போக என்று கூறும் இடத்தில்.

3.தலைமகன் உடன்போக்கு ஒருப்பட்டதைக் கூறும் போது

4.தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின் போது

5.வாய்மையும், பொய்மையும் காணப்பட்ட அவளைச் சுட்டித் தாயின் நிலை நோக்கி மீட்கும் போது

6. தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவியைத் தேற்றும் போதும்.

பிரிவின் போது தோழி கூற்று நிகழ்த்துவதற்குப் பின்வரும் பாடலைச் சான்று காட்டலாம்.

பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
………………………………………….
……………………………………….
புல்என்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ?
ஆள்பவர் கல்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவாளோ?
ஓர்இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநிப்பின் வாழ்வாளோ? (கலித். 4)

பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியை விட்டுப் பிரிய முற்படுகிறான் தலைவன். தோழியோ, நீ பொருள் தேடச் சென்றாள் தலைவி உயிரோடு இருக்கமாட்டாள்' என்பதை நயமாகச் சான்றுகளுடன் தலைவனுக்கு எடுத்துச்சொல்லி பிரிவைத்; தடுத்ததை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

கண்டோர் கூற்று

உடன் போக்கில் செல்லும் தலைவனும், தலைவியும் இடைச் சுரத்தில் பயணம் மேற்கொள்ளும் போது அவர்களைக் காணும் மாந்தர்களே கண்டோர்

எனப்படுவர். இக்கண்டோர் கூற்றுக்களை தொல்காப்பியர் பின்வரம் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

“பொழுதும் ஆறும் உட்;குரவத் தோன்றி
வழுவின் ◌ேகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்புமு செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விருப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப” (அகத்.43)

பிரிவில் கண்டோர் கூற்று நிகழும் இடங்களை ஏழு வகையாகப் பிரிப்பார் தொல்காப்பியர்

1.ஏகும் காலமும் செல்லும் வழியும் அச்சம் தருமாறு கூறி அவற்றது தீங்கு காரணமாக வழிச்செல்வார்க்கு வரும் தீங்கினைத் தெரிவிக்கும் போதும்

2.எம்ஊர் அருகில் உள்ளது என்றும் நீங்கள் செல்ல வேண்டிய ஊர் சேய்மையில் உள்ளது என்றும் கூறும் போதும்.

3.இனி இவ்வழி செல்லல் அரிது நும் ஊர் பெயர்தல் வேண்டும் என்று கூறும் போதும்.

4.செவிலித்தாயைத் தடுத்து மொழியும் போதும்.

5.அவர் இன்னவழிச் சென்றனர் எனக் கூறி அவளைப் போக்கலின் போதும்.

6.சேய்மையில் செல்லும் தலைமக்களின் உடன் போக்கிடத்தும்

7.அவர்களது மறுவரவின் போதும்.

என இவ்வாறு ஏழு இடங்களில் கண்டோர்க்கு கூற்று நிகழும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொள்கின்றனர். இடைச்சுரத்திலே அவர்களைக் கண்டோர் பொழுதும் செலவும் பகையும் எடுத்துச் சொல்லி அவர்களின் செலவை விலக்கியதை பின்வரும் குறுந்தொகைப் பாடல் விளக்குகிறது

எல்லும் எல்லின்று பாடும் கேளாய
செல்லா தீமோ சிறுபிடி துணையோ

வேற்றுமுனை வெம்மையின் சாத்துவந்து இறுந்தென
வளை அணி நெடுவேல் ஏந்தி
மிளைவந்து பெயரும் தண்ணுமைக் குரலே. (குறுந். 390)

தலைவன் கூற்று

அகனைந்திணை ஒழுக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைமகன் தலைமகள் இருவரும் உடன் போக்கில் ஈடுபட்டுள்ள காலத்தில் பிரிவில் தலைமகன் கூற்று நிகழும் இடங்கள் யாவை என்பது குறித்துத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்

“ஒன்றாத் தமரினும பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற்பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
…………………………………………..
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன” (அகத்.44)

எனத் தலைவனுக்குக் கூற்று நிகழும் இடங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உரையாசிரியர்கள் பின்வரும் நிலையில் அவற்றை விரித்துக் கூறுகின்றனர். அவை

1.வரைவுக்கு உடன்படாத தலைவியின் சுற்றத்தாரிடம்

2.தலைவியின் இயல்புக்கு ஏற்காத வேனிற் பருவத்திலும்.

3.தலைவியை உடன்கொண்டு செல்லும் வழியில்

4.இவளை உடன்போக்குக் கொண்டு செல்வேன் என்று தோழியிடம் கூறும் போதும்.

5.தான் தலைவியை விட்டுப் பிரியுமிடத்தும்.

6.தலைவியை அவள் தமர் மீட்டுச்செல்லும் போதும்,

7.பொருளை விரும்பும் மனத்திடம் தலைவியின் நிலையைக் கூறும்பொழுதும்.

8.இளமைக்காலம் அழிந்தால் அதைப் பெறுவது அரிது என்று கூறும் பொழுதும்.

9.நாடு காவலின் போதும்

10.பரத்தையின் பிரிவின் போதும்

என 24 இடங்களில் தலைவனுக்குக் கூற்று நிகழும் எனத் தொல்காப்பியர் குறிப்படுகிறார்.

முடிவுரை.

இவ்வாறு தொல்காப்பிய அகத்திணையியலில் பிரிவு என்பது குறித்தும். அறு வகைப் பிரிவின் நிலை பற்றியும், குறிப்பிடும் தொல்காப்பியர் பரத்தையிற் பிரிவு என்பது குறித்து வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கற்பியலில் அது பற்றி விளக்குகிறார். மேலும் பிரிவின் போது ஏற்படும் கூற்றுக்கள் பற்றியும் எடுத்துக்கூறுகிறார். ஆக தம் காலத்தில் இருந்த பிரிவு குறித்த மரபுகளைத் தொல்காப்பியர் நூற்பாக்களின் வழி வெளிப்படுத்தியிருப்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டியுள்ளது.

துணை நின்ற நூல்கள்:

1.இளம்பூரணர் (உரை) - தொல்காப்பியம் பொருளதிகாரம்

2.முனைவர் தமிழண்ணல் - தொல்காப்பியம் பொருளதிகாரம் (தொகுதி 1)

3.முனைவர் கி.இராசா - தொல்காப்பியம் பொருளதிகாரம் (பகுதி 1)

4.சொ.சிங்காரவேலன் - தொல்காப்பியம் எளிய உரை

5.அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் - எட்டுத்தொகை (தொகுதி 1,2,3)

6.முனைவர் ப.ச.ஏசுதாசன் - தொல்காப்பியம் காட்டும் சமுதாயம்